# DAC மதிப்பாய்வு நியதிகள்

## இணக்கப்பாடு

(Coherence)

பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் பிரஜைகளுக்கான அதி செயற்திறன் மிக்க உறுப்பினராக இருப்பதற்கு ஆர்வம் கொண்டுள்ளீர்களா?

பாராளுமன்ற விவாதங்களின்போது உங்களது தொகுதியை பிரதிநிதித்துவம் செய்து சரியான கேள்விகளை எழுப்புவதன் ஊடாக நாட்டின் அபிவிருத்தியை உச்சமடையச் செய்வதற்கு ஆர்வங் கொண்டுள்ளீர்களா?

அப்படியாயின் பொருளாதார ஒத்துழைப்புக்கான அபிவிருத்தி நிறுவனம்/அபிவிருத்தி உதவிக்கான குழு (OECD/DAC) ஏற்றுக்கொண்ட மதிப்பாய்வு நியதிகள் அடங்கிய இந்த கையேட்டுத் தொடரினை வாசிப்பது பிரயோசனமாகும்.

**மதிப்பாய்வுக்கான ஆசிய பசுபிக் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமையம்**

## அறிமுகம்

பாராளுமன்றத்திற்குள்ள அதிகாரங்களின் ஊடாக மக்களை பிரதிநிதித்துவம் செய்தல், சட்டவாக்கம், அரசாங்கத்தின் பொறுப்புக் கூறல் போன்ற அபிவிருத்தி செயன்முறையில் முக்கிய பாத்திரம் ஒன்றை வகிக்க முடியும். ஆனாலும் அரசாங்கத்தின் கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் வலுவாகவும் சரியாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டதா? என்பதையும், மக்களின் வாழ்க்கையில் அவை விருத்தியை ஏற்படுத்தியதா என்பதையும் எவ்வாறு உறுதி செய்ய முடியும்? அவை சிறந்த கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களா? என்பதை எவ்வாறு உறுதி செய்ய முடியும்?

மதிப்பாய்வின் மூலமான ஆதாரங்களைக் கொண்டு விமர்சன பூர்வமான சிந்தனைகள் ஊடாக திட்டங்கள் மற்றும் கொள்கைகளை வடிவமைப்பதில், செயற்படுத்துவதில், கலாசாரம் ஒன்றை வளர்த்தெடுப்பதில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகமானது சிறந்த தலைமைத்துவத்துடன் நியாாயமான, நிலைபேறான அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதாகவும் அமையும்.

அபிவிருத்தி இடையீடுகள் (Intervention) தொடர்பிலான தெளிவான புரிதலுடன் பாராளுமன்ற விவாதாங்களிலும் துறைசார் குழு அறைக் கலந்துரையாடல்களிலும் சரியான கேள்விகளை முன்வைப்பதன் மூலம் பிரஜைகளுக்கான உச்சப்பயன் கிடைப்பதை உறுதி செய்யலாம். பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதங்களின்போது சரியான கேள்விகளை மதிப்பாய்வு ஆதாரங்கள் ஊடாக முன்வைப்பதற்கு அவசியமான அடிப்படைகளை OECD/ DAC மதிப்பாய்வு நியதிகள் வழங்குகின்றன.

## இணக்கப்பாடு (Coherence)

இடையீடானது எந்தளவு இணக்கப்பாடுடையதாகவுள்ளது என்பதை அளவீடு செய்யும் நியதியாக இணக்கப்பாடு (Coherence) உள்ளது என்பதாக OECD/DEC வரைவிலக்கணம் செய்கிறது. நாட்டில் வேறு துறையில், வேறு நிறுவனத்தில் இடம்பெறும் அபிவிருத்தி இடையீடுகள் குறித்த அபிவிருத்தி இடையீட்டுடன் எந்தளவுக்கு இணக்கப்பாடுடையதாகவுள்ளது என்பதே இங்கு அளவீடு செய்யப்படுகின்றது.

நடைமுறையில் உள்ள ஏனைய அபிவிருத்தி இடையீடுகளானது குறித்த இடையீட்டுக்கு (குறிப்பாக கொள்கைகளுடன்) எந்தளவு உதவியாக உள்ளது அல்லது இடையூறாக உள்ளது என்பதை இரண்டு வகையாகவும் ஆராயும் நியதியாக உள்ளது. இது உள்ளக இணக்கப்பாடு வெளியக இணக்கப்பாடு என இரண்டையும் உள்ளடக்கும். அரசாங்கத்தினால் அல்லது நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி இடையீடுகளுக்கு இடையில் காணப்படும் இடைத்தொடர்புகள் குறித்து ஆராய்வது உள்ளக இணக்கப்பாடு ஆகும். வெளியக இணக்கப்பாடு எனும்போது ஒரே தன்மைகொண்ட ஏனையோர் முன்னெடுக்கும் வேறுபட்ட அபிவிருத்தி இடையீடுகளுடன் கொண்டுள்ள இணக்கபாடு கொண்டுள்ள தொடர்ச்சித்தன்மை குறித்து ஆராய்வதாகும். இது குறித்த இடையீடுகளுக்கு இடையே காணப்படும் பதிலீடுகள், ஒற்றுமைகள், ஏனையோருடனான இணைப்பு போன்றன ஊடாக எந்தளவுக்கு குறித்த அபிவிருத்தி இடையீட்டுக்கு பெறுமதி சேர்க்கைச் செய்கிறது என்பதனை அளவிடுவதுடன் இரண்டு தடவைகள் ஒரே இடையீடு இடம்பெறுவதை தவிர்ப்பதாகவும் அமையும்.

### மதிப்பாய்வு நியதிகள்

**பொருத்தப்பாடு (Relevance)**
இடையீடு சரியானைதைச் செய்கிறதா?

**செயற்திறன் (Effectiveness)**
இடையீடு அதன் நோக்கங்களை அடைகின்றதா?

**தாக்கம் (Impact)**
இடையீடு எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியது?

**இணக்கப்பாடு (Coherence)**
இடையீடு எந்தளவுதூரம் இணக்கமாகவுள்ளது?

**வினைத்திறன் (Efficiency)**
வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன?

**நிலைபேறானதன்மை (Sustainability)**
இறுதிவரையான பயனாற்றுகை அடையப்பெறுகின்றதா?

## மதிப்பாய்வின் இணக்கப்பாடு (Coherence) நியதியை பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு பயன்படுத்தலாம்?

பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் பங்குகொள்வதன் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்கள் கொள்கை உருவாக்கத்திற்கு பங்களிப்பு செய்ய முடியும். இத்தகைய சந்தர்ப்பங்களில நாட்டில், ஒரே நேரத்தில் இடம்பெறும் வேறுபட்ட அபிவிருத்தி இடையீடுகள் குறித்த அபிவிருத்தி இடையீட்டுடன் எந்தளவுக்கு இணக்கப்பாடுடையதாகவுள்ளது என்பதை புரிந்து கொள்வதற்கு **இணக்கப்பாடு** (Coherence) **நியதியை** கையாள்வதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களது பங்களிப்பு உயர்வாக அமையும்.

உதாரணமாக வறுமை ஒழிப்புத்திட்டம் என்பது பொருளாதார அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், தொழிற்பயிற்சி முதலான ஏனைய துறைசார்ந்த திட்டங்களுடன் தொடர்புகளைக் கொண்டது. இவை வேறுபட்ட அமைச்சுக்களினால் வெவ்வேறு திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படலாம். இந்த அமைச்சுக்களுக்கு இடையே காணப்படக்கூடிய இணைப்புச் செயற்பாடுகள் அவைகளின் இடையீட்டு நடவடிக்கைகளில் காணப்படும் இணக்கப்பாடுகள் வறுமை ஒழிப்பு சார்ந்து முன்னெடுக்கும் நடவடிக்கைகளின் பெறுபேற்றை உச்சமாக்குவதாக அமையும்.

இவ்வாறு வெவ்வேறு துறைகளில் அலலது அமைச்சுக்களில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி இடையீடுகளுக்கு இடையே காணப்படக்கூடிய இணக்கப்பாடானது, தேவையற்ற போட்டிகள். ஒரே வேலையை இரண்டு தரப்பு செய்தல், ஒன்றிக்கு மேலதிகமாக இன்னொன்றைச் செய்தல், போன்றவற்றைத் தவிர்த்து சாதகமான விளைவுகளைத் தரக்கூடிய சாத்தியமான பொறிமுறைகள் தொடர்பிலான படிப்பினையைத் தருவதாகவும் இணங்கிச் செல்வதாகவும் அமையும். தேசிய ரீதியாக மேற்கொள்ளும் அபிவிருத்திகளை மேற்பார்வை செய்வதன் ஊடாக தொகுதி ரீதியாக மக்களை நேரடியாக தொடர்புபடுத்துகின்ற வகிபாகத்தை பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்டுள்ளனர். எனவே அபிவிருத்தி இடையீடுகளுக்கு இடையே இருக்கக்கூடிய இருக்க வேண்டிய தொடர்புகளை நன்குணர்ந்தவர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களே உள்ளனர். எனவே அபிவிருத்தி இடையீடுகளுக்கு இடையே காணப்படக்கூடிய, காணப்பட வேண்டிய இணக்கப்பாடுகள் தொடர்பிலான கேள்விகளை அமைச்சுக்களிடத்திலே தொடுத்து அதன் மூலம் விருத்தியடைந்த விளைவுகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலான அறிக்கையை பாராளுமன்றத்திற்கு வழங்குவதற்கான வாய்ப்பு இதன்மூலம் ஏற்படுகின்றது.

## மதிப்பாய்வின் இணக்கப்பாடு (Coherence) நியதியை உறுதி செய்யும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பக்கூடிய கேள்விகள்

அபிவிருத்தி நோக்கிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் இடையீடுகளின் **மதிப்பாய்வின் இணக்கப்பாட்டுத்** (Coherence) தன்மை குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பக்கூடிய கேள்விகளாக பின்வருவனவற்றை உதாரணமாகக் கொள்ளலாம். ஆனாலும் இத்தகைய கேள்விகளை எழுப்பும்போது, அத்தகைய கொள்கை, இடையீட்டின் தன்மையையும் அது முன்னெடுக்கப்படும் நாட்டின் பின்னணியையும் கருத்திற்கொண்டு விவாதத்துக்கு அவசியமான விதத்தில் கேள்விகளை எழுப்புவது முக்கியமாகும்.

**அ:** அபிவிருத்தி இடையீடானது வடிவமைக்கப்படும் போது இதே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இதனையொத்த வேறு அபிவிருத்தி இடையீடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதா?

**ஆ:** உள்ளக ரீதியாகவும் வெளியக ரீதியாகவும் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி இடையீடுகள் ஒரே விடயத்துக்கு தீர்வு வழங்குவதில் எந்தளவு ஒன்றுக்கொன்று உதவியாக இருந்துள்ளன?

**இ:** ஒரே துறையில் இயங்கக்கூடிய அபிவிருத்தி இடையீட்டு அக்கறையாளர்கள் இடையேயான இணைப்புத் தொடர்புகள் உள்ளதா?

**ஈ:** நிறுவனம் அர்ப்பணிப்பு கொண்ட நியமங்கள் விழுமியங்கள், அது முன்னெடுக்கும் இடையீட்டுடனும் பிணைக்கப்பட்டுள்ளதா?

---

*Source: De Silva,S.(2021).Theory of Change For Development Success: Workbook. Colombo, Sri Lanka: Sri Lanka Evaluation Association*

## இணக்கப்பாடு (Coherence) தொடர்பிலான வேறு வள மூலங்கள்


OECD evaluation criteria, retrieved from
*https://tinyurl.com/2p9835a6*

OECD(2022). Understanding the six criteria: Definitions, elements for analysis and key challenges. retrieved from
*https://tinyurl.com/bddeffx8*


**வெளியீடு**


ASIA PACIFIC PARLIAMENTARIANS FORUM FOR EVALUATION

APEA Asia-Pacific Evaluation Association

Global Parliamentarians Forum for Evaluation



தொடர்புகளுக்கு: apea.coordinator@gmail.com


**தமிழாக்கத்திற்கான அனுசரணை**


SLEvA
Sri Lanka Evaluation Association



தொடர்புகளுக்கு: sleva.sec@gmail.com